[31st October 1958

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, ஆதாரப் பயிற்சி பள்ளிகளில் பயிற்சி பெறும் ஆசியர்களுக்கு தொழில் கல்வியளித்து பின்னர் அவர்கள் ஆசிரியர்களாகும்போது தொழில் மூலம் கல்வி கற்பிக்க அவர்களுக்கு பயிற்சி ஏதேனும் அளிக்கப்படுகிறதா ? தொழில் கல்வி மூலம் கல்வி கற்பிப்பதைப் பற்றி கவனம் செலுத்தப்படுகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தப் பயிற்சி தான் அங்கு கொடுக்கப்படுகிறது. கனம் அன்பழகன் அவர்களை அந்தப் பயிற்சி நிலயங்களுக்குப் போய் நான்கு நாட்கள் இருந்து அந்தப் பயிற்சி நிலையங்கள் எப்படி வேலை செய்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRIMATHI DR. T. S. SOUNDARAM RAMACHANDRAN : இந்தத் தொழில்கள் மூலமாக வரக்கூடிய வருமானத்தை மதியச் சாப்பாட்டுக்குப் பயன் படுத்தலாம் என்று சர்க்கார் அங்கீகாரம் கொடுத்திருக்கிறார்கள். ஒரு ஹாஸ்டலில் இருந்து படிப்பது முக்கிய குறிக்கோளாக உள்ள ஹாஸ்டல் விஷயத்தில், சாப்பாட்டுக்கு உபயோகப்படுத்தலாம் என்று சர்க்கார் உத்திரவு போடுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது வரும் வருவாய் மதிய உணவுக்குப் போதுமான அளவுள்ளதாகத்தான் இருக்கும் என்று கருதி இந்த உத்திரவை அரசாங்கம் போட்டிருக்கிறது. அதற்கு மேல் வருவாய் வந்தால் ஹாஸ்டலிலே உபயோகப்படுத்தலாம் என்ற திருத்த உத்தரவு போடும் விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

Medical Colleges

* 736 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) (1) சென்னை வைத்தியக் கல்லூரி,

(2) மதுரை வைத்தியக் கல்லூரி,

(3) ஸ்டான்லி வைத்தியக் கல்லூரி,

(4) தஞ்சை வைத்தியக் கல்லூரி,

ஆகியவைகளிலே ஒவ்வொரு கல்லூரியிலும் பூர்வாங்க வைத்திய வகுப்பிலே 1958-ம் ஆண்டில் எத்தனை மாணவர்களும், மாணவிகளும் சேர்க்கப் பட்டார்கள் ?

(ஆ) இவர்களுள், ஹரிஜன மாணவர்களும் மாணவிகளும் எத்தனை பேர் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Among the four Government Medical Colleges, the Pre-medical course is conducted only in the Madras Medical College, Madras, wherein 96 men students have been admitted this year. The other selected students have been admitted in the various Arts Colleges in the State. The 94 women students selected for the Pre-medical course have been admitted in the Queen Mary's College, Madras, and the Holy Cross College, Tiruchirappalli.

(*b*) Thirty-two men and four women.

SRI A. A. RASHEED : May I know from the Hon. Minister whether the district-war quota fixed for admission into these colleges is based on the population of the district or on the basic needs of the district?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, the district-war quota is given on the basis of population.

31st October 1958]

SRI M. C. MUTHUKUMARASWAMY: ஸார், இந்தக் கல்லூரி களில் சேருவதற்கு மனுப் போட்ட ஹரிஜன மாணவ மாணவிகளுடைய மனுக்களெல்லாம் அங்கீகரிக்கப்பட்டனவா ? அங்கீகரிக்கப்படாத மனுக்கள் எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: எல்லாம்தான் என்று நினைக்கிறேன்.

Industrial Co-operative for Harijans

* 737 Q.—**SRI K. B. S. MANI (on behalf of Sri P. G. Manickam)**: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப் பாரா—

(அ) சென்னை ராஜ்யத்திலே ஹரிஜனங்களுக்காக ஏற்படுத்தப்பட்டி ருக்கும் 40 கூட்டுறவு தொழிற்சாலைகளும் எந்தெந்த இடங்களிலே இருக் கின்றன ?

(ஆ) இத் தொழிற்சாலைகளிலே என்னென்ன தொழில்கள் செய்யப் படுகின்றன ?

(இ) ஒவ்வொரு கூட்டுறவு தொழிற்சாலையிலும் எத்தனை ஹரிஜனங் கள் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள் ?

(ஈ) ஒவ்வொரு கூட்டுறவு தொழிற்சாலையிலும் உள்ள மூலதனம் எவ்வளவு ?

THE HON. SRI P. KAKKAN: A statement[a] is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI: ஸார், இங்கு கொடுக்கப் பட்டிருக்கிற அறிக்கையில், வட ஆற்காடு மாவட்டத்தில் ஆனந்தம் சோப் பாக்டரி ஒன்று ஒதுக்கியிருப்பதாகவும், அதில் மெம்பர்கள் 28 பேர்கள் என்றும், ஷேர் கேபிடல் ஒன்றுமேயில்லையென்றும் கொடுக்கப்பட்டிருக் கிறது. ஷேர் கேபிடலே இல்லாமல் எந்த இடத்தில் ஆரம்பிக்கப்பட்டி ருக்கிறது என்று சொல்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி கேட்டால் சொல்ல முடியும்.

SRI M. C. MUTHUKUMARASWAMY: ஸார், கொடுத்திருக்கிற புள்ளி விவரப்படி தஞ்சை ஜில்லாவில் கூட்டுறவுத் தொழில் அதிக மில்லை என்று தெரிகிறது. தஞ்சை ஜில்லாவில் வசிக்கின்ற ஹரிஜன மக்கள் வருஷத்தில் ஏறத்தாழ 5 மாதங்கள்தான் விவசாயத்தில் ஈடு பட்டிருக்கிறார்கள். மற்ற மாதங்களில் வேலை ஒன்றுமில்லாமல் இருக்கி றார்கள். ஆகையால் தஞ்சை ஜில்லாவில் அதிகமாக கூட்டுறவுத் தொழிற் சாலைகளை ஆரம்பிக்க அரசாங்கம் ஏதாவது துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: இந்தக் கூட்டுறவு சொஸைடிகள் கிராம மக்களால் ஏற்படுத்தப்படுகிறது. கனம் அங்கத்தினர் அக்கறை எடுத்து அந்தப் பகுதியில் சொஸைடிகள் ஆரம்பிக்க முயற்சிகள் செய்வா ரானால், அரசாங்கம் வேண்டிய உதவியளிக்கும்.

SRI S. NAGARAJA MONIGAR: இந்த சொஸைடிகளில் இதர ஜாதியினரும் சேர்ந்து வேலை செய்ய அனுமதிக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN: பின் தங்கிய மக்கள் கூட அங்கத் தினர்களாக இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

---

[a] Printed as Appendix III on pages 269–270 infra.